**IN THE COURT OF THE ADDITIONAL ASSISTANT SUBORDINATE COURT, HOSUR**

**Date : 13.11.2025**

**SC. 76/2022**

**அ.சா 7 – பாலமுருகன் த/பெ கருப்பன்னன், காவல் ஆய்வாளர்**

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ம் நாள் **பாலமுருகன்** என்பவரின் சாட்சியாக விசாரரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின் படி திரு கிருஷ்ணமூர்த்தி தலைமை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது .

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **பாலமுருகன்** | தந்தை பெயர் | **கருப்பன்னன்** |
| வயது | 59 | கிராமம் | நீலகிரி |
| வட்டம் | நீலகிரி | மாவட்டம் | நீலகிரி |

**( எதிரிகள் ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )**

**முதல் விசாரணை : –**

1. நான் தற்போது நீலகிரி மாவட்டம் , புதுமந்து காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு 2015 ல் சூளகிரி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வந்தேன். கடந்த 10.08.2015 ம் தேதி 15.00 மணிக்கு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளர் K. காமராஜ் என்பவர் நிலைய பொறுப்பு அலுவலில் இருந்த போது வெங்கடராஜ் த/பெ வீரப்பா என்பவர் கொடுத்த புகாரின் பேரில் , சூளிகிரி காவல் நிலைய குற்ற எண் 563/2015 ச/பி 379 இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்தும், முதல் தகவல் அறிக்கையும் , வாதியின் புகாரையும் கனம் நீதித்துறை நடுவர் I ஓசூர் , அவர்களுக்கு அனுப்பி வைத்தும், ஆய்வாளர் ஆகிய நான் ஒரு நகலை புலன் விசாரணைக்கு பெற்று கொண்டு 10.08.2015 ம் தேதி மதியம் 16.00 மணிக்கு சாட்சிகள் 1. ரமேஷ் மற்றும் 2. கிரிமுர்த்தி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார்

செய்யப்பட்டது. அந்த பார்வைமகஜர் ஏற்கனவே அ.சா 4 மூலம் அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மாதிரி வரைபடம் **அ.சா,ஆ 13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கின் சாட்சிகளை வெங்கடராஜ் 2. சேகர் 3. அம்பேத் 4. குமரேசன் 5. ரமேஷ் 6. கிரிமூர்த்தி ஆகியோர்களை விசாரித்து அன்றைய தினமே வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது, இந்த வழக்கின் சம்பவத்தை பார்வையிட்டதில் இருந்தும், சாட்சிகளின் வாக்குமூலத்தில் இருந்தும் , சம்பவம் உண்மையென தெரிய வந்ததால், இவ்வழக்கின் எதிரிகளை தேடி வந்த நிலையில் கடந்த 31.08.2015 ம் தேதி பகல் 16.00 மணிக்கு எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் போலிஸ் பார்டியுடன் சந்தேகத்திற்கு இடமான முறையில் புலியரசி காட்டில் பேரிகை – சூளகிரி ரோடு வழியாக நடந்து சென்ற 5 நபர்களை சந்தேகத்தின் பேரில் பிடித்து விசாரித்ததில் தாங்கள் குற்றத்தை ஒப்பு கொண்டவர்களை கைது செய்தும், சாட்சிகள் 1. ரமேஷ் 2. கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் இவ்வழக்கின் முதலாவது எதிரி R. மஞ்சுநாத் தானக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை 16.30 மணிமுதல் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி மற்றும் சாட்சிகளின் கையொப்பம் பெறப்பட்டது. அந்த **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி எங்களை கூட்டிகொண்டு போனால் இரும்பு ராடையும், செல்போனையும், செலவு செய்தது போக மீதத் தொகை ரூ.7500/– ம் எனது வீட்டில் மறைத்து வைத்திருப்பதை எடுத்து ஒப்படைக்கிறேன் என்ற பகுதி மட்டும் அ.சா,ஆ 14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்கின் 2 ம் எதிரி மஞ்சுநாத் @ R.R. மஞ்சுநாத் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை 17.30 மணிமுதல் பதிவு செய்தும், அதில் சாட்சிகள் மற்றும் எதிரியின் கையொப்பம் பெறப்பட்டது. **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி எங்களை கூட்டிகொண்டு போனால் இரும்பு ராடையும், செல்போனையும், செலவு செய்தது போக மீதத் தொகை ரூ.7500/– ம் எனது வீட்டில் மறைத்து வைத்திருப்பதை எடுத்து ஒப்படைக்கிறேன் என்ற பகுதி மட்டும் அ.சா,ஆ 15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்கின் 3 ம் எதிரி A. மஞ்சுநாத் என்பவர் அதே

சாட்சிகள் முன்னிலையில் 18.30 மணிக்கு தானா முன்வந்து கொடுத்து ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தும், அதில் சாட்சிகள் மற்றும் எதிரியின் கையொப்பம் பெறப்பட்டது. **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி எங்களை கூட்டிகொண்டு போனால் இரும்பு ராடையும், செல்போனையும், செலவு செய்தது போக மீதத் தொகை ரூ.7500/– ம் எனது வீட்டில் மறைத்து வைத்திருப்பதை எடுத்து ஒப்படைக்கிறேன் என்ற பகுதி மட்டும் அ.சா,ஆ 16 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்கின் 4 ம் எதிரி சாமிநாதன் என்பவர் அதே சாட்சிகள் முன்னிலையில் 19.30 மணிக்கு தானா முன்வந்து கொடுத்து ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தும், அதில் சாட்சிகள் மற்றும் எதிரியின் கையொப்பம் பெறப்பட்டது. **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி எங்களை கூட்டிகொண்டு போனால் இரும்பு ராடையும், செல்போனையும், செலவு செய்தது போக மீதத் தொகை ரூ.7500/– ம் எனது வீட்டில் மறைத்து வைத்திருப்பதை எடுத்து ஒப்படைக்கிறேன் என்ற பகுதி மட்டும் அ.சா,ஆ 17 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்கின் 5 ம் எதிரி மாதேஷ் என்பவர் அதே சாட்சிகள் முன்னிலையில் 20.30 மணிக்கு தானா முன்வந்து கொடுத்து ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தும், அதில் சாட்சிகள் மற்றும் எதிரியின் கையொப்பம் பெறப்பட்டது. **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி எங்களை கூட்டிகொண்டு போனால் இரும்பு ராடையும், செல்போனையும், செலவு செய்தது போக மீதத் தொகை ரூ.7500/– ம் எனது வீட்டில் மறைத்து வைத்திருப்பதை எடுத்து ஒப்படைக்கிறேன் என்ற பகுதி மட்டும் அ.சா,ஆ 18 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்கின் முதலாவது எதிரி R. மஞ்சுநாத் தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் சொன்னபடி அதே சாட்சிகள் முன்னிலையில் இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட கிரே கலர் அப்பாச்சி இரு சக்கர வாகனம் பதிவு எண் TN 70 C 4362 என்ற பதிவெண் கொண்டதை 31.08.2015 இரவு 22.30 மணிக்கு சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி அதற்கு மகஜர் தயார் செய்து கைப்பற்றப்பட்டது. அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா,ஆ 19** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

இவ்வழக்கின் 3 ம் எதிரி A. மஞ்சுநாத் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் படி 31.08.2015 ம் தேதி 23.30 மணியைபோல் அவரது வீட்டில் இருந்து எடுத்து ஆஜர்படுத்திய கத்தி ஒன்றை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா,ஆ 20** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கின் 4 ம் எதிரி சுவாமிநாதன் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் படி 01.09.2015 ம் தேதி இரவு 00.15 மணியைபோல் அவரது வீட்டில் இருந்து எடுத்து ஆஜர்படுத்திய பஜாஜ் டிஸ்கவர் TN 70 C 7015 அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா,ஆ 21** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கின் சாட்சிகள் ரமேஷ் மற்றும் ஈஸ்வரன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பின்னர் கைப்பற்றிய பொருட்களையும் எதிரிகளையும் நிலையம் கொண்டு வந்து கைப்பற்றிய பொருட்களுக்கு தனித்தனியாக படிவம் 91 தயார் செய்தேன். அந்த படிவம் 91 (3 எண்ணிக்கை ) **அ.சா.ஆ 22 முதல் அ.சா.ஆ 24 வரை** ஆகும். ஆகும். பின்னர் எதிரிகளையும் , கைப்பற்றிய பொருட்களையும் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். இந்தவழக்கில் 12.09.2015 ம் தேதி அடையாள அணிவகுப்பு நடத்த கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் தேன்கனிக்கோட்டை அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் அளித்தும், மேற்படி நடுவர் அவர்கள் 07.10.2015 ம் தேதி சேலம் மத்திய சிறையில் வைத்து அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டது, அதில் சாட்சி வெங்கடராஜ் என்பவர் கலந்து கொண்டு எதிரிளான 1. R. மஞ்சுநாத் 2. R.R. மஞ்சுநாத் 3. A. மஞ்சுநாத் ஆகியோர்களை சரியாக அடையாளம் காட்டினார். சாட்சிகளின் வாக்குமூலம் மற்றும் விசாரணையில் இருந்து எதிரிகள் இவ்வழக்கு சம்பவத்தின்போது திருட்டுகுற்றம் புரியாமல் கொடும் ஆயுதங்களுடன் கொள்ளைக்குற்றம் புரிந்தது தெரிய வரவே தெரிய வரவே இவ்வழக்கின் சட்டப்பிரிவான 397 இதச வில் இருந்து ச/பி 395, உ/இ 397 இதச வாக சட்டப்பிரிவுகளை மாற்றி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார்

செய்ததேன். அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ 25** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது ச/பி 395, உ/இ 397 இதச குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை. எனவே முடிக்கப்பட்டது.**

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Assistant Subordinate Judge,
Hosur